**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

**முன்னிலை : திருமதி.ஜா.ஆஃப்ரீன் பேகம், M.Com., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நத்தம்.
2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18ம் நாள் சனிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், சித்திரை திங்கள் 05ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.196/2025**
CNR No.TNDG100023422025

குற்றமுறையிடுபவர் – காவல் சார்பு ஆய்வாளர்
நத்தம் காவல் நிலைய
குற்ற எண்.454/2025

எதிரியின் பெயர் – பாலாஜி 28/2025 த/பெ.செல்வராஜ்

| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No.814/2020/RG/FI(P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | |
|---|---|---|---|---|---|
| **CASE SUMMARY** | | | | | |
| (i) | The period of remand of the accused | : | Name of the Accused | Date of Arrest/Remand | Release on |
| | | | பாலாஜி 28/2025 த/பெ.செல்வராஜ், பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல். | 07.10.2025 | 07.10.2025 |
| (ii) | Date of filing of the complaint/final report in the court | : | Filing of Complaint | Filing of Final Report | |
| | | | 04.10.2025 | 24.10.2025 | |
| (iii) | Date of committal of the cases to the Court of Sessions: | : | Nil | | |
| (iv) | Date of questioning of the accused under Section 228, 240 and 251 of the Code of Criminal Procedure 1973, as the case may be; | : | 11.12.2025ம் தேதி அன்று நத்தம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட எதிரி மீது பிரிவுகள் 281, 106(1)BNSன் கீழ் குற்றம் குறித்து விளக்கி கூறப்பட்டது. | | |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.18 07:30:21 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (v) | Filing of all miscellaneous petitions and their results | : | Crl.M.P.No. | Date of Filing | Result<br><br>Nil |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (vi) | Date of Examination in Chief and Cross | : | Name of the Examination | | Date of Chief | Date of Cross |
| | | | PW1 | திருமதி.அடைக்கம்மாள் | 12.03.2026 | 12.03.2026 |
| | | | PW2 | திரு.மாணிக்கம் | 12.03.2026 | 12.03.2026 |
| | | | PW3 | திரு.வீரன் | 12.03.2026 | 12.03.2026 |
| | | | PW4 | திரு.பிரபு | 12.03.2026 | 12.03.2026 |
| | | | PW5 | திரு.சிவராமகிருஷ்ணன் | 08.04.2026 | 08.04.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vii) | Date of examination of the accused under section 313 of the Code; | | 10.04.2026 | | |
| (viii) | Details of abscondance of an accused and his appearance /production, as the case may be; and | | Nil | | |
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | | Sessions Court CMP Numbers | High Court No and Date of Stay | Result |
| | | | Nil | | |

| | | |
|---|---|---|
| குற்றஞ்சாட்டு: | : | கடந்த 04.10.2025ம் தேதி மதியம் சுமார் 1.30 மணியளவில் விளாம்பட்டி பிரிவில் நத்தம் TO மதுரை பைப்பாஸ் ரோட்டை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி கடந்து சென்றுகொண்டிருந்த போது அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக வந்த எதிரி TN 57 CA 7683 என்ற பதிவு எண் கொண்ட XUV 3XOஎன்ற காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாவும், முரட்டுத்தனமாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து வாதி அடைக்கம்மாளின் கணவர் லெட்சுமணன் சென்றுகொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி வாதி அடைக்கம்மாளின் கணவர் லெட்சுமணன் என்பவருக்கு தலை மற்றும் மார்பில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே லெட்சுமணன் இறந்ததாக பிரிவுகள் 281, 106(1) BNSன் கீழும் குற்றம் சாட்டப்பட்டது. |
| எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | : | இறுதியாக, அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லையென இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, இவ்வழக்கின் எதிரி மீது பிரிவுகள் 281, 106(1) BNSன் கீழ் குற்றவாளி |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:30:27 +0530

| | | |
|---|---|---|
| | | இல்லை என்று தீர்மானித்து, மேற்படி எதிரியை 271(1) of BNSS Actன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது. |
| தண்டனை (அ) உத்தரவு | : | எதிரி நிறைவேற்றி தந்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் சொத்து குறித்து உத்தரவு இல்லை. |

இவ்வழக்கு 27.10.2025ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 10.04.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–I திருமதி. P. அமர்ஜோதி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் திரு.K.மூர்த்தி வழக்கறிஞரும் ஆஜராகி இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் வாயிலாக எழுந்துள்ளது. இதற்கு பின்பு பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 (The Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNSS என்றும், பாரதிய நியாய சட்டம் 2023 (The Bharatiya Nyaya Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNS என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் –**

கடந்த 04.10.2025ம் தேதி மதியம் சுமார் 1.30 மணியளவில் விளாம்பட்டி பிரிவில் நத்தம் TO மதுரை பைப்பாஸ் ரோட்டை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி கடந்து சென்றுகொண்டிருந்த போது அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக வந்த எதிரி TN 57 CA 7683 என்ற

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:30:33 +0530

பதிவு எண் கொண்ட XUV 3XOஎன்ற காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாவும், முரட்டுத்தனமாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து வாதி அடைக்கம்மாளின் கணவர் லெட்சுமணன் சென்றுகொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி வாதி அடைக்கம்மாளின் கணவர் லெட்சுமணன் என்பவருக்கு தலை மற்றும் மார்பில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே லெட்சுமணன் இறந்ததாக நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் 04.10.2025ம் தேதி பிரிவுகள் 281, 106(1) BNSன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பிறகு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS, 2023 பிரிவு 230–ன் கீழ் 20.11.2025ம் தேதி அன்று இலவசமாக வழங்கப்பட்டது.

4. எதிரிக்கு போதிய அவகாசம் அளித்து ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், முதல் நோக்கு ஆதாரங்கள் இருந்ததால் 11.12.2025ம் தேதியன்று எதிரி மீது பிரிவுகள் 281, 106(1) BNSன் கீழ் குற்றம் குறித்து பிரிவு 263 BNSS –ன் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றச்சாட்டை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:30:39 +0530

5. அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.13 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு –**

7. கடந்த 04.10.2025ம் தேதி மதியம் சுமார் 1.30 மணியளவில் விளாம்பட்டி பிரிவில் நத்தம் TO மதுரை பைப்பாஸ் ரோட்டை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி கடந்து சென்றுகொண்டிருந்த போது அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக வந்த எதிரி TN 57 CA 7683 என்ற பதிவு எண் கொண்ட XUV 3XOஎன்ற காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாவும், முரட்டுத்தனமாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து வாதி அடைக்கம்மாளின் கணவர் லெட்சுமணன் சென்றுகொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி வாதி அடைக்கம்மாளின் கணவர் லெட்சுமணன் என்பவருக்கு தலை மற்றும் மார்பில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே லெட்சுமணன் இறந்ததாக அ.சா.1 ஆனவர் அ.சா.5 காவல் ஆய்வாளர் சிவராமகிருஷ்ணன் என்பவரிடம் அ.த.சா.ஆ.1 புகார் செய்துள்ளார்.

8. மேற்படி புகாரை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அ.சா.5 காவல் ஆய்வாளர் சிவராமகிருஷ்ணன் நத்தம் காவல்நிலைய குற்ற

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:30:46 +0530

எண்.454/2025 சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS வழக்காக அ.த.சா.ஆ.4 முதல்தகவல்அறிக்கை பதிவு செய்து சம்பவ இடமான நத்தம் – மதுரை பைபாஸ் ரோடு விளாம்பட்டி பிரிவு அருகே சென்று சம்பவ இட சாட்சிகள் அ.சா.4 பிரபு மற்றும் அ.சா.3 வீரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.த.சா.ஆ.6 பார்வை மகஜர் மற்றும் அ.த.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்து பின்னர் பட்டியல் சாட்சிகளான அடைக்கம்மாள், மாணிக்கம், குருந்தன், வெள்ளிமலை ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 05.10.2025ம் தேதி வாகன விபத்தில் இறந்த நபரான லெட்சுமணன் என்பவரது பிரேதத்தை பஞ்சாயத்தார் முன்னிலையில் நத்தம் அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்து அ.த.சா.ஆ.7 பிரேத விசாரணை அறிக்கை பெற்றுள்ளார்.

9. பின்னர் பிரேத பரிசோதனை அலுவலாக தலைமை காவலர் 1763 டோம்னிக் என்பவரிடம் அ.த.சா.ஆ.8 பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார். பின்னர் எதிரியை நிலைய பிணையில் விடுவித்துள்ளார். எதிரி பாலாஜி ஓட்டி வந்த 4 சக்கர வாகனமான TN 57 CA 7683 என்ற பதிவெண்கொண்ட மகேந்திரா XUV என்ற காரை மோட்டார் வாகன ஆய்விற்கு அ.த.சா.ஆ.9 வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி இறந்துபோன நபர் ஓட்டி வந்த TN 59 AV 0144 என்ற பதிவெண்கொண்ட Passion Pro இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி அ.த.சா.ஆ.11 மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். 16.10.2025ம் தேதி இவ்வழக்கில் இறந்து போன

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:30:50 +0530

லெட்சுமணன் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கிய நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் பட்டியல் சாட்சி 8 பிரவீன்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

10. அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக பாதகமாக உள்ள சாட்சியங்கள் பற்றி பிரிவு 351(1)(b) of BNSS, 2023–ன் படி 10.04.2026ம் தேதி கேள்விகள் கேட்டபோது, எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

11. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தங்களது வாதத்தில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள வழக்கு அரசுதரப்பு சாட்சிகளின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது எனவும், குற்றவாளிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

12. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் எதிரி தரப்பில், வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்ததாக கூறுவது உண்மையல்ல என்றும், வழக்கில் கூறப்படுவது போல விபத்தானது ஏற்படவில்லை என்றும், எதிரி வாகனத்தை மெதுவாக ஓட்டி வந்துள்ளார் என்றும், இறந்த நபர் தான் இருச்சக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்தார் என்பதை புகார்தாரரான அ.சா.1 மற்றும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2யே தனது

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:30:56 +0530

குறுக்குவிசாரணையில் ஒத்துக்கொள்ளும் நிலையிலும், எதிரி வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்ததாகவோ, எதிரியுடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாகவோ நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்றும், எதிரியின் மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே எதிரியை வழக்கிலிருந்து விடுதலை செய்து உத்தரவிடவேண்டியது அவசியம் என வாதிடப்பட்டுள்ளது.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:</u>**

13. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1) அரசு தரப்பில் எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதும்,

2) அவ்வாறு நிரூபணம் செய்யப்பட்டால் எதிரிக்கு கிடைக்கக்கூடிய தண்டனை குறித்த விபரம் என்ன? என்பதேயாகும்.

**<u>தீர்வு</u>**

14.1. கடந்த 04.10.2025ம் தேதி மதியம் சுமார் 1.30 மணியளவில் விளாம்பட்டி பிரிவில் நத்தம் TO மதுரை பைப்பாஸ் ரோட்டை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி கடந்து சென்றுகொண்டிருந்த போது அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக வந்த எதிரி TN 57 CA 7683 என்ற பதிவு எண் கொண்ட XUV 3XOஎன்ற காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாவும், முரட்டுத்தனமாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:31:01 +0530

அடிக்காமலும் ஓட்டி வந்து வாதி அடைக்கம்மாளின் கணவர் லெட்சுமணன் சென்றுகொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி வாதி அடைக்கம்மாளின் கணவர் லெட்சுமணன் என்பவருக்கு தலை மற்றும் மார்பில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே லெட்சுமணன் இறந்ததாகவும் அதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பிடமே உள்ளது. எதிரி தரப்பில் வழக்கில் கூறப்படுவது போல விபத்தானது ஏற்படவில்லை என்றும், இறந்த நபரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் எதிரியின் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

14.2. எதிரி பொது சாலையில் வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்து கவனக்குறைவாக செயல்பட்டு அதன் விளைவால் லெட்சுமணன் என்பவருக்கு மரணத்தை ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் கூறப்படும் நிலையில் அதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும். விபத்து சம்பவம் குறித்து கேள்விபட்டு புகார் அளித்ததாக கூறப்படும் அ.சா.1 அடைக்கம்மாள் தனது சாட்சியத்தில் சுமார் 6 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் பகல் 1.30 மணியளவில் விளாம்பட்டி பிரிவில் என் கணவர் இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது, திண்டுக்கலிலிருந்து மதுரை நோக்கி சென்று கொண்டிருந்த டாடா ஏஸ் போன்ற வாகனம் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டதாக என் கொழுந்தன் சதீஸ் என்பவர் போன் மூலம் சொன்னார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:31:08 +0530

உடம்பு முழுவதும் காயம்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

14.3. அ.சா.1ன் சாட்சியத்தினை பரிசிலிக்கும் போது எதிரி விபத்தில் சம்பந்தப்பட்ட காரை ஓட்டி வந்ததாகவோ, கார் வேகமாக வந்ததாகவோ எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாகவோ நிரூபிக்கும் வகையில் அ.சா.1ன் சாட்சியம் அமையவில்லை என்பது தெரிகிறது. மேலும் அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் விபத்து நடந்ததை கேள்விப்பட்டு தான் வந்ததாகவும், எனது கணவர் தான் ஜாக்கிரதையாக ரோடை கடந்திருக்க வேண்டும் என்றால் சரிதான். விபத்தானது எனது கணவரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தை யார் ஓட்டி வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும் சாட்சியமளித்துள்ளார். அவரது சாட்சியமானது எதிரி மீதான குற்றச்சாட்டை நிருபணம் செய்யும் வகையில் இல்லை.

14.4. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.2 மாணிக்கம் தனது சாட்சியத்தில் "ஆஜர் எதிரியை தெரியாது. சுமார் 6 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் மதியம் சுமார் 12.00, 1.00 மணியளவில் விளாம்பட்டி விளக்கில் விபத்து நடந்ததாக அருகில் இருந்தவர்கள் சொன்னதன் பேரில் நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது, இருசக்கர வாகனத்தில் சென்ற எங்கள் ஊரைச் சேர்ந்த வேம்பரளியில் வசிக்கும் அழகர் என்று நாங்கள் அழைக்கக்கூடிய எனக்கு தெரிந்த தம்பி ஒருவர் விபத்து ஏற்பட்டு இறந்து

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.18 07:31:12 +0530

கிடந்தார். அவருக்கு நெற்றி மற்றும் காலில் ரத்தக் காயம் இருந்தது. மேற்படி வாகனத்தின் மீது மோதியது கார் என்று சொன்னார்கள். காரை நான் பார்க்கவில்லை என்று சாட்சியமளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்குவிசாரணையில் நான் சென்று பார்த்த போது விளாம்பட்டி பிரிவிலிருந்து தெற்கு பக்கம் கிழக்கிலிருந்து மேற்காக ரோட்டை திடீரென அழகர் என்பவர் இருசக்கர வாகனத்தில் கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன் என்றால் சரிதான். விபத்தானது இறந்து போனதாக சொல்லப்படும் அழகர் என்பவரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரி கவனக்குறைவாகவோ, அஜாக்கிரதையாகவோ வாகனத்தை ஓட்டி வரவில்லை என்றால் சரிதான் என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2ன் சாட்சியத்தினை பரிசிலிக்கும் போது அவர் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்து இருப்பதும் அவர் விபத்தினை நேரில் பார்க்கவில்லை என்பதும் தெரிய வருகிறது.

14.5. அ.த.சா.ஆ.6 பார்வை மகஜரில் கையெழுத்து செய்ததாக கூறப்படும் அ.சா.3 வீரன் தனது முதல் விசாரணையில் "சுமார் 6 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் விளாம்பட்டியில் விபத்து நடந்த இடத்தில் வைத்து போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து விசாரணை செய்தபோது சாட்சியாக கையொப்பம் செய்ததாக தெரிவித்துள்ளார். அதேபோல் மற்றொரு பார்வைமகஜர் சாட்சி சுமார் 5, 6 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் விளாம்பட்டி விளக்கில் வைத்து போலீசார் விபத்து சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள். பின்னர்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:31:23 +0530

சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து விசாரணை செய்தபோது சாட்சியாக கையொப்பம் செய்ததாக தெரிவித்துள்ளார். மேற்படி இரு சாட்சிகளும் குறுக்கு விசாரணையில் நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்று தெரிவித்து இருந்தாலும், ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது என்று அ.சா.3 தெரிவித்திருந்தாலும் கூட போலீசார் சம்பவ இடம் வந்து தான் ஆவணங்கள் தயார் செய்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. இதன்மூலம் விபத்தானது அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது போல் விளாம்பட்டி பிரிவில் நடந்துள்ளது என்பது அறிய முடிகிறது.

14.6. மேலும் மேற்படி வாகன விபத்து சம்பவத்தின் வாயிலாக லெட்சுமணன் என்பவர் இறந்துள்ளார் என்பதும், அவர் TN 59 AV 0144 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்துள்ளார் என்பதும் அ.த.சா.ஆ.7 பிரேத விசாரணை அறிக்கை, அ.த.சா.ஆ.13 பிரேத பரிசோதனை அறிக்கை, அ.த.சா.ஆ.10 மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது. அ.த.சா.ஆ.7 பிரேத விசாரணை அறிக்கையில் "Opinion as to cause of death என்ற காலத்தில் The deceased would appear to have died of...Hemorrhagic Neurogenic shock due to RTA (Head injury & Chest injury) என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சாலை விபத்தின் போது தலையிலும் நெஞ்சிலும் ஏற்பட்ட பலத்த காயங்களால், அதிகப்படியான ரத்த இழப்பு மற்றும் மூளைச் செயல்பாட்டில் ஏற்பட்ட திடீர் முடக்கம் ஆகிய காரணங்களினால் லெட்சுமணன் இறந்துள்ளார் என்பதை அறிய

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:31:27 +0530

முடிகிறது. அதேபோல் அ.த.சா.ஆ.10 ஆன TN 59 AV 0144 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையில் " 1. Head Light Assembly Broken 2. Front Both Indicator Assembly Broken 3. Front Number Plate Bend 4. Handle Bar Bend 5. Right Side Petrol Tank Pressed Inside 6. Silencer Damaged 7. Rear Wheel Mounting Support Frame Bend 8. Front Right Shock absorber Cut ஆகிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், விபத்தானது வாகன இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதை காண முடிகிறது.

14.7. அரசு தரப்பு சாட்சியங்கள் வாயிலாக விளாம்பட்டியில் இருந்து நத்தம் – மதுரை பைபாஸ் சாலையில் கிழக்கிலிருந்து மேற்காக செல்வதற்கு ரோட்டை கடப்பதற்கு தேசிய நெடுஞ்சாலையில் அரசால் பாதை வசதி ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை என்பதும், தனிப்பட்ட ஒரு நபரின் திருமண விழாவிற்காக விளாம்பட்டி பிரிவில் செல்ல பொதுமக்களால் சாலையின் நடுவில் இருந்த சென்டர் மீடியனை உடைத்து வழி ஏற்படுத்திக் கொண்டார்கள் என்பதும் அறிய முடிகிறது. மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் " ...விளாம்பட்டி சாலையில் இருந்து நத்தம் – மதுரை மெயின் ரோட்டிற்கு கிழக்கிலிருந்து மேற்காக செல்வதற்கு அரசால் எவ்வித பாதை வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். பொதுமக்களால் உடைக்கப்பட்ட சென்டர் மீடியனிலிருந்து விளாம்பட்டிக்கு போகும் சாலை 40 அடி இருக்கும் என்றால் இருக்கும். சென்டர் மீடியன் உடைக்கப்பட்ட பகுதி ஆனது வடக்கு தெற்காக சுமார் 20 அடி இருக்கும் என்றால் இருக்கும்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:31:33 +0530

எனது கணவர் விபத்தில் இறந்ததாக சொல்லப்படும் பகுதியானது மேற்படி உடைக்கப்பட்ட சென்டர் மீடியனில் தெற்கு புறம் என்றால் சரிதான். விளாம்பட்டி பிரிவிலிருந்து 60 அடி தூரத்தில் உடைக்கப்பட்ட சென்டர் மீடியன் பகுதிக்கு கிழமேலாக ரோட்டின் குறுக்கே கடந்த போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த இடத்தில் குறுக்கே கடந்து செல்வதற்கு பேரிகார்டோ, சிக்னல் போன்ற அமைப்போ இல்லை என்றால் சரிதான்..." என்று தெரிவித்துள்ளார். மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5–ல் விபத்து நடந்த இடமாக சாலையின் நடுப்பகுதி குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது. மேற்படி விபத்து நடந்த சாலையானது தேசிய நெடுஞ்சாலை என்பதும், விளாம்பட்டி பிரிவிலிருந்து மேற்படி தேசிய நெடுஞ்சாலையை கிழக்கிலிருந்து மேற்காக கடப்பதற்கு எவ்வித அமைப்பும், வசதியும் நெடுஞ்சாலை துறையினரால் ஏற்படுத்தப்படவில்லை என்பதும் நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில், சாலை விதிகளின் படி விளாம்படி பிரிவிலிருந்து நத்தம் – மதுரை செல்லும் பைபாஸ் ரோட்டில் சென்று அதற்கு அடுத்ததாக உள்ள பிரிவில் திரும்பி தான் செல்ல வேண்டியதுள்ளது. ஆனால் விபத்தில் இறந்த நபர் முறையாக சாலை விதிகளை பின்பற்றி தனது வாகனத்தை ஓட்டி செல்லவில்லை என்பது புலனாகிறது.

14.8. மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில் "எனது கணவருக்கு வாகன ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். அவர் ஓட்டி வந்த வாகனத்திற்கு இன்சூரன்ஸ் இல்லை என்றால் சரிதான். வண்டிக்கான RC புக் ஆனது எனது பெயரிலோ, எனது கணவர் பெயரிலோ இல்லை என்றால்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.18 07:31:42 +0530

சரிதான். விபத்து சமயம் எனது கணவர் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான்" என்று தெரிவித்துள்ளார். உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், தலைக்கவசம் அணியாமலும், சாலை விதிகளை பின்பற்றாமலும் கவனக்குறைவாக திடீரென தேசிய நெடுஞ்சாலையில் குறுக்கே சென்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. எனவே விபத்தானது இறந்தநபரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டுள்ளது என்பதும், எதிரியால் விபத்து ஏற்படவில்லை என்பதும் அறிய முடிகிறது.

14.9. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையிலும், இறந்த நபரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதாக எதிரி தரப்பில் எதிர்வாதம் செய்யப்படும் நிலையில் அரசு தரப்பு சாட்சியங்களை முழுமையாக பரிசிலனை செய்த வகையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் எனது கணவர் தான் ஜாக்கிரதையாக ரோடை கடந்திருக்க வேண்டும் என்றால் சரிதான். விபத்தானது எனது கணவரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தை யார் ஓட்டி வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்று சாட்சியமளித்து இருப்பதும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2யே கேள்விப்பட்டு தான் சென்றதாக கூறியுள்ள நிலையிலும், அவரும் அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து கூறும் நிலையிலும் அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துவதுடன் எதிரி தரப்பு எதிர்வாதத்தை வலு சேர்க்கும் வகையில் அமைந்து இருப்பதும் தெரிய வருகிறது. அரசு தரப்பு சாட்சியங்களை முழுமையாக பரிசிலனை செய்த வகையில் விபத்தில் சம்பந்தப்பட்ட TN 57

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:31:46 +0530

CA 7683 என்ற வாகனத்தை எதிரி அதிவேகமாக ஓட்டி வந்ததாகவோ, எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாகவோ அதன் விளைவால் லெட்சுமணன் என்பவருக்கு மரணம் ஏற்பட்டதாகவோ நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்பது தெரிய வருகிறது. எனவே, எதிரியின் மீதான பிரிவு பிரிவுகள் 281, 106(1) BNSன் படியான படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு செய்கிறது.

15. இறுதியாக, எதிரி மீதான பிரிவுகள் 281, 106(1) BNSன் கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரியை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை பிரிவு 271(1) of BNSS Actன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

**<u>பிரிவு 498 BNSSன் கீழான உத்தரவு:</u>**

இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் பிரிவு 498 BNSS–ன் கீழ் உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.04.18 07:31:52 +0530

என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் அவையறிய 18.04.2026ம் தேதி பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:31:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.

**அரசுத் தரப்பு சாட்சிகள் –**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 12.03.2026 | திருமதி.அடைக்கம்மாள் (புகார்தாரர்) |
| அ.சா.2 | 12.03.2026 | திரு.மாணிக்கம் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | 12.03.2026 | திரு.வீரன் (பார்வைமகஜர் சாட்சி) |
| அ.சா.4 | 12.03.2026 | திரு.பிரபு (பார்வைமகஜர் சாட்சி) |
| அ.சா.5 | 08.04.2026 | திரு.சிவராமகிருஷ்ணன் (புலன்விசாரணை அதிகாரி) |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்–**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 / அ.சா.1 | 04.10.2025 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2 / அ.சா.3 | 04.10.2025 | பார்வைமகஜரிலுள்ள 2வது சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3 / அ.சா.4 | 04.10.2025 | பார்வைமகஜரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.4 / அ.சா.5 | 04.10.2025 | முதல்தகவல்அறிக்கை |
| அ.த.சா.ஆ.5 / அ.சா.5 | 04.10.2025 | மாதிரிவரைபடம் |
| அ.த.சா.ஆ.6 / அ.சா.5 | 04.10.2025 | பார்வைமகஜர் |
| அ.த.சா.ஆ.7 / அ.சா.5 | 04.10.2025 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.த.சா.ஆ.8 / அ.சா.5 | 05.10.2025 | பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதம் (லெட்சுமணன்) |

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.9 / அ.சா.5 | 07.10.2025 | மோட்டார் வாகன ஆய்விற்கான வேண்டுகோள் கடிதம் (TN 57 CA 7683) |
| அ.த.சா.ஆ.10 / அ.சா.5 | 07.10.2025 | மோட்டார் வாகன ஆய்விற்கான வேண்டுகோள் கடிதம் (TN 59 AV 0144) |
| அ.த.சா.ஆ.11 / அ.சா.5 | 07.10.2025 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 57 CA 7683) |
| அ.த.சா.ஆ.12 / அ.சா.5 | 07.10.2025 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 59 AV 0144) |
| அ.த.சா.ஆ.13 / அ.சா.5 | 05.10.2025 | பிரேத பரிசோதனை அறிக்கை |

**<u>அரசுத் தரப்பு சான்றுபொருட்கள் :</u>**– இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :</u>**–

இல்லை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:32:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.

**<u>குறிப்பு –</u>**

1) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் அழைத்து விசாரணை செய்யப்படவில்லை.

3) இவ்வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.18 07:32:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.